22.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

வளிமண்டலத்தில் கிழக்குக் காற்றும் மேற்குக் காற்றும் சந்திப்பதால் தமிழகம், புதுவையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வெப்பத்தைப் பொருத்தவரை இயல்பு நிலையிலிருந்து மேலும் குறைய வாய்ப்புள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை கர்நாடக மாநிலத்தில் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் மழை பெய்து வருகிறது. கேரளத்திலும் பரவலாக மழை பெய்துள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு, கடலூர், வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அதிகபட்சமாக 40 மி.மீ. மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக கடலூர் மாவட்டம் விருத்தாசலம், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி, நெய்வேலி, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஆகிய இடங்களில் 30 மி.மீ. மழை பெய்துள்ளது. இதுதவிர நாமக்கல், கன்னியாகுமரி, கோவை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது. செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்டப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறியது: மத்திய வங்கக் கடலில் மேலடுக்கு சுழற்சி ஜூன் 22, 23 தேதிகளில் உருவாக வாய்ப்புள்ளது. மேலும் தமிழகத்தின் மேல் வளிமண்டலப் பகுதியில் கிழக்கு காற்றும், மேற்குக் காற்றும் சந்திக்கும் காலநிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது. வெப்பநிலையைப் பொருத்தவரை சராசரி வெப்பநிலையைக் காட்டிலும் சற்று குறைவாகவே காணப்படும் என்றார் அவர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக மேட்டூர் அணையின் நீர் பிடிப்புப் பகுதிகளிலும், காவிரியின் உப நதிகளான பாலாறு, தொப்பையாறு மற்றும் சின்னாறு பகுதிகளிலும் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை காலை நொடிக்கு 124 கன அடி வீதம் வந்துகொண்டிருந்த நீர், செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 622 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து திங்கள்கிழமை நொடிக்கு 2,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உருவாகும்.

செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 42.16 அடியாக இருந்தது.

## காலிஃப்ளவர் விளைச்சல் அதிகரிப்பு

பல்லடம், பொங்கலூர் பகுதியில் பருவநிலை மாறியதால் காலிஃப்ளவர் விளைச்சல் அதிகரித்துள்ளது.

பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் சித்திரை, வைகாசி மாதங்களில் அதிக வெப்பத்தால் காலி ஃபிளவர் விளைச்சல் பாதிக்கப்பட்டது. பூக்களின் நிறம் மஞ்சளாக மாறியதால் தரம் குறைந்த பூக்களே கிடைத்தன. இவற்றை விற்பனை செய்ய விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

தற்போது ஈரப்பதத்துடன் கூடிய காற்று வீசத் துவங்கியுள்ளதால் வெள்ளை நிறத்தில் பூக்கள் பூக்கத் துவங்கியுள்ளன. நல்ல தரமான பூக்கள் கிடைப்பதால் காலிஃப்ளவர் விற்பனை சூடுபிடித்துள்ளது. முன்பு ஒரு பூ ரூ.40-க்கு விற்பனையானது. தற்போது விளைச்சல் அதிகரிப்பால் ஒரு பூ ரூ.30-க்கு விற்பனையாகிறது.

இதுகுறித்து வாவிபாளையம் விவசாயிகள் கூறுகையில், "கடந்த மாதத்தில் காலிஃப்ளவருக்கு நல்ல விலை கிடைத்த போதிலும் பெரும்பாலான விவசாயிகளுக்கு காலிஃப்ளவர் அதிக அளவு விளைச்சல் இல்லை. தரமில்லாத பூக்களால் விற்பனை பாதிக்கப்பட்டது. தற்போது பல்லடம்,பொங்கலூர் பகுதிகளில் பருவநிலை மாறியதால் தரமான பூக்கள் கிடைக்கிறது' என்றனர்.

## எலுமிச்சை விலை குறைவு

பருவநிலை மாற்றத்தால் எலுமிச்சையின் நுகர்வு குறைந்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

பல்லடத்துக்கு பெரியகுளம், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி மற்றும் ஆந்திரத்தில் இருந்து எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. பிப்ரவரி முதல் மே மாதம் வரை கோடை காலம் என்பதால் நுகர்வு அதிகரித்து கடந்த வாரம் வரை எலுமிச்சை பழம் ஒன்று அளவை பொருத்து ரூ.5 முதல் ரூ.10 வரை விற்கப்பட்டது. தற்போது

பருவநிலை மாற்றத்தால் எலுமிச்சை பழம் நுகர்வு குறைந்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதுகுறித்து பல்லடம் எலுமிச்சை பழம் வியாபாரிகள் கூறியதாவது:

கோடை காலத்தில் பொதுவாக எலுமிச்சை பழம் விற்பனை நன்றாக இருக்கும். கடந்த வாரத்தில் நாள்தோறும் 4 டன் வரை எலுமிச்சை வரத்து இருந்தது. இப்போது அது பாதியாக மட்டுமே வரத்து உள்ளது. மேலும் பருவநிலை மாற்றத்தால் நுகர்வும் குறைந்துள்ளது. அதனால் எலுமிச்சை விலை குறைந்துள்ளது. சந்தையில் ரூ.4-க்கும் சில்லறை வியாபாரிகளிடம் ரூ.5-க்கும் எலுமிச்சை விற்பனை செய்யப்படுகிறது என்றனர்.

## சிறு தானியத்தை மக்கள் பயன்படுத்தக் கோரிக்கை

கோபி அருகே கடுக்காம்பாளையத்தில் கீழ்பவானி முறைநீர்ப்பாசன விவசாயிகள் சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு, தலைவர் வி.என்.தங்கமுத்து தலைமை வகித்தார். கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் கே.வி.கோவிந்தராஜ், சிறு தானியத்தின் பயன், உற்பத்தி குறித்துப் பேசினார்.

சிறு தானிய உற்பத்திக்கு அதிகமான நீர் ஆதாரம் தேவையில்லை. ரசாயன உரமும் தேவைப்படாது. பசுவின் கழிவுகளை மட்டுமே உரமாகப் போடுவதன் மூலமாக உரச் செலவுகள் இல்லை. உடல் இயக்கத்துக்குத் தேவையான இரும்பு, பாஸ்பரஸ் போன்ற சத்துகளும், தாதுப்புகளும் சிறு தானியத்தில் உள்ளதால் உடல் வலுப்பெறும். கேப்பைக்களி, சோளச்சோறு, கம்பஞ்சோறு, வரகு, பணிவரகு, சாமை, திணை, குதிரைவாலி, காடைக்கண்ணி போன்ற சிறு தானியங்களால் செய்யப்படும் உணவை உண்பதால் உடல்நலம் மேம்படும் என்றார்.

## அபூர்வ மூலிகைகள் நிறைந்த கொல்லிமலை வனம்



கொல்லிமலையில் பல ஆயிரம் ஏக்கரில் அபூர்வ வகை மூலிகைகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் வாய்ப்பு இல்லாத அவல நிலை உள்ளது.

கூடுவிட்டுக் கூடு பாயும் அதிசய சித்தர்கள் பலர் இன்னும் வாழ்வதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ள இடம்தான் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை. கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில்ஓரி ஆட்சி செய்த வளமான மலை நாடு. கடல் மட்டத்தில் இருந்து 1,200 மீட்டர் உயரத்தில், 250 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட மூலிகை வனம். இங்கு 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர்.

14 வருவாய்க் கிராமங்களை (மலை நாடு) உள்ளடக்கிய 250-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டதுமான இந்த மலை நாட்டுக்கு, நவநாகரிக புதிய கலாசாரங்கள் வந்துவிட்டாலும், இங்குள்ள மூலிகைகளும், சிறு தானியங்களும் கொல்லிமலையின் பழைமையைப் பாதுகாத்து வருகின்றன.

இங்குள்ள மக்கள் ஆயிரக்கணக்கில் உள்ள ஆபூர்வ வகை மூலிகைகளைக் காப்பாற்றி, அழியாது பாதுகாத்து வருகின்றனர். தினை, கேழ்வரகு, சாமை ஆகிய பாரம்பரிய சிறு தானியங்களைப் பல நூறு

ஏக்கர்களில் பழைய விவசாய முறைகளை மேற்கொண்டு சாகுபடி செய்து வருகின்றனர்.

14 மலை நாடுகளில் பரவிக் கிடக்கும் மூலிகைகள்: வாழவந்தி நாடு, வளப்பூர் நாடு, அரியூர் நாடு, தின்னனூர் நாடு, குண்டூர் நாடு, சேளூர் நாடு, தேவனூர் நாடு, ஆலந்தூர் நாடு, குண்டனி நாடு, திருப்புலி நாடு, எடப்புலி நாடு, சித்தூர் நாடு, பெரக்கரை நாடு, பெயில் நாடு என 14 வருவாய்க் கிராமங்களில் லட்சக்கணக்கில் மூலிகைகளும், ஆதி காலத்து சிறு தானியங்களும் பரவிக் கிடக்கின்றன.

மூலிகைகளில் ஜோதிப் புல், சாய்ந்தாடும் பாவை, கருநெல்லி, சிவப்புக் கற்றாழை, கருவாழை, சிவப்புக் கடுக்காய், ரோமவிருட்சம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

ஜோதிப் புல் ஒன்றைப் பிடுங்கி தீயில் பற்றவைக்க மெழுகுவர்த்தி போல விடியவிடிய சுடர்விட்டு வெளிச்சம் தருமாம். இன்றும் இந்த மலையில் உள்ள குகைகளில் தங்கியிருக்கும் சித்தர்கள் பலருக்கு இரவு நேர வெளிச்சம் கொடுப்பது இந்த ஜோதிப்புல்தானாம்.

இதேபோல, ரோம விருட்சம் என்ற மரத்தின் இலைகளை அரைத்து 45 நாள்கள் தலையில் தேய்த்து, கொல்லிமலையில் உள்ள ஆகாய கங்கை அருவியில் குளித்துவர தலை முடி உதிர்வது உடனே நின்று, கருகரு முடியைப் பெறலாம் எனக் கூறப்படுகிறது.

கொல்லிமலையில் உள்ள அடர் வனங்களில் இயற்கையில் விளையும் ஒரு வாழைதான் கல் வாழை, இந்தப் பழத்தை இரண்டு மண்டலம் (90 நாள்கள்) சாப்பிட்டு வர, பெருத்த தேகம் கொண்டோர் இளைத்து சராசரியான தேகத்தைப் பெறுவார்களாம்.

ஆதள மூலிகைச் செடியின் இலையைக் கிள்ளினால் அதில் ஒருவித பால் கசியுமாம். அந்தப் பாலுடன் கரும் பூனையின் முடியைக் கலந்து செம்பு பாத்திரத்தில் ஊற்றி, சூடு செய்து சுண்டவைத்து, அதை மலைத் தேன் கொண்டு பிசைந்து, சிறு உருண்டையாக்கி, அதை செப்புத் தகடு எந்திரத்தினுள் இட்டு 6 மாதங்களுக்கு மூடி வைக்க வேண்டுமாம். 6 மாதங்கள் கழித்து செப்புத் தகட்டை நீக்கிவிட்டு சிறு உருண்டைகளை வாயில் போட்டு அதக்கிக் கொண்டால் யார் கண்ணுக்கும் தெரியாமல் மனிதர்கள் மாயமாக மறைந்து விடுவார்களாம். அத்தகைய ஆற்றல்

கொண்ட அபூர்வ மூலிகைதான் ஆகளம். இந்த அபூர்வ மூலிகையின் சக்தியால்தான் இன்றளவும் பல சித்தர்கள் யார் கண்ணுக்கும் புலப்படாமல் வாழ்ந்து வருவதாக நம்பப்படுகிறது.

இதுபோன்று இந்தப் பகுதியில் பல ஆயிரம் மூலிகைகள் இங்கு பயன் தெரியாமல், பாதுகாப்பும் இல்லாமல் மறைந்து கிடக்கின்றன.

மாறாத சிறுதானியங்கள் சாகுபடி: கொல்லிமலை 14 மலை நாடுகளில் உள்ள மலைவாழ் மக்களின் முக்கியத் தொழில் விவசாயம்தான். வீரிய ஒட்டு ரகங்கள், மரபணு மாற்று விதைகள் என்று நவீன விவசாயம் இங்கும் வந்துவிட்டாலும், இங்குள்ள மக்கள் பலரும் கேழ்வரகு, தினை, சாமை ஆகிய மூன்று சிறு தானியங்களைப் பல நூறு ஆண்டுகளாக, பல ஆயிரம் ஏக்கர்களில் பயிரிட்டு வருகின்றனர்.

டிராக்டர், ரசாயன உரம், பூச்சி மருந்து என்று பசுமைப் புரட்சி சில ஆண்டுகளுக்கு முன்னர் மலை மீது ஏறிவிட்டபோதிலும், பாரம்பரிய விவசாயத்தைக் கைவிடாமல் பழைமைப் புரட்சி செய்து வருகின்றனர் இந்த மக்கள்.

பழைமைக்கும், பாரம்பரியத்துக்கும் பாதுகாப்பு தேவை: இதுகுறித்து தமிழ்நாடு பழங்குடியினர் மலையாளி நலச் சங்க மாநிலத் தலைவர் கே. குப்புசாமி கூறியதாவது:

கொல்லிமலையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மூலிகை வகைகள், உடல் நலன் காக்கும் பழ வகைகள், சிறு தானியங்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்த பல கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால், இவற்றைப் பாதுகாக்க எந்த ஏற்பாடும் இல்லை.

மூலிகை ஆராய்ச்சி மையம், வேளாண் வணிகத் துறை மூலம் சிறு தானியச் சந்தை, பழச் சந்தை ஆகியவற்றை கொல்லிமலையின் அமைப்பதன் மூலம், இந்தப் பொக்கிஷங்களைப் பாதுகாக்கவும், மக்களின் நலன் காக்கும் வகையில் பயன்படுத்தவும் முடியும் என்றார் அவர்.

## திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குவிந்த பருத்தி

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு விவசாயிகள் 928 லாட் பருத்தி பஞ்சுகளைக் கொண்டு வந்திருந்தனர்.

பஞ்சுகளை செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்திருந்த 10 வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச்சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர்.

இதையடுத்து பிற்பகல் வேளாண் விற்பனைக் குழு கண்காணிப்பாளர் ரமணி ஏலப்பெட்டியைத் திறந்து வியாபாரிகள் கேட்ட விலையை படித்தார். இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 5589 விலை கேட்கப்பட்டிருந்தது.

குறைந்தபட்சமாக ரூ. 4600 விலையும், சராசரியாக ரூ. 5250 விலை போனது. கடந்த வாரத்தைக் காட்டிலும் செவ்வாய்க்கிழமை பருத்தி பஞ்சுகளை விவசாயிகள் அதிக அளவில் கொண்டு வந்தனர். அதே போல் விலையும் குவிண்டாலுக்கு ரூ. 300 வரை கூடுதலாகக் கிடைத்தது.

## "ரப்பர் விவசாயிகள் நாளை ஆலோசனை பெறலாம்'

ரப்பர் வாரிய சிறப்பு அழைப்பு மையத்தில் ரப்பர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பால் சேகரிப்பு தொழில்நுட்ப இணை இயக்குநர் கே.யூ. தாமஸ் வியாழக்கிழமை (ஜூன் 23) பதில் அளிக்கிறார்.

இதற்காக ரப்பர் விவசாயிகள் 0481-2576622 என்ற தொலை பேசி எண்ணில் வியாழக்கிழமை காலை 9.30 முதல் மாலை 5.30 வரை தொடர்பு கொள்ளலாம்.

இந்த வாய்ப்பை குமரி மாவட்ட ரப்பர் விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென்று ரப்பர் வாரிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தாய்லாந்தில் தடை

சாதாரண புளியில் 19 சதவீதம் இனிப்புத் தன்மை உள்ளது. நமது இனிப்புப் புளியில் 49 சதவீதம் இனிப்புத் தன்மை இருக்கிறது. தாய்லாந்து தான் இனிப்புப் புளிக்கு பெயர் பெற்றது. இதில் 64 சதவீதம் இனிப்பு உள்ளது. தாய்லாந்து இனிப்புப் புளியை சாப்பிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தலாம். சமையலுக்கு சரிவராது. இந்த தாய்லாந்து இனிப்பு புளியமரம் தமிழகத்தில் வளரும் இயல்பை கொண்டுள்ளது. ஆனால் இந்த கன்றுகளை (செடி) தாய்லாந்து அரசு வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல தடை விதித்துள்ளது. இனிப்புப் புளி பரவினால் தாய்லாந்து இனிப்புப் புளி விலை வீழ்ச்சியடையும் என்பதே தடைக்கு காரணம்.

## நீர் வரத்து கால்வாயை சீரமைக்கும் பணி தீவிரம்

ஓசூர்: ஓசூர் ராமநாயக்கன் ஏரியின் நீர்வரத்து கால்வாய்களை சீரமைக்கும் பணியை, சப்-கலெக்டர் செந்தில்ராஜ் துவக்கி வைத்தார்.

ஓசூர் நகரின் மையப்பகுதியில் ராமநாயக்கன் ஏரி அமைந்துள்ளது. ஏரியின் நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், கடந்த, 15 ஆண்டுக்கும் மேலாக ஏரி நிரம்பாமல் உள்ளது. ஏரியின் நீர்வரத்து கால்வாய்களில் உள்ள முட்புதர் ஆக்கிரமிப்புகளை அகற்ற, சப்-கலெக்டர் செந்தில்ராஜ் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, கர்னூர் ஏரியில் இருந்து ராமநாயக்கன் ஏரிக்கு வரும் நீர்வரத்து கால்வாய்களை சீரமைக்கும் பணி, வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலையில் நேற்று துவங்கியது. இதை சப்-கலெக்டர் செந்தில்ராஜ் துவக்கி வைத்தார். ஓசூர்

நகராட்சி தலைவர் (பொறுப்பு) ராமு, தாசில்தார் தியாகராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வரும் 24ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்;திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 24ம் தேதி நடைபெற உள்ளது.திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 24ம் தேதி பகல், 11:00 மணிக்கு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.ஆட்சியர் சுந்தரவல்லி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின் வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மைப் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்து உள்ளது.

## கே.ஆர்.எஸ். அணையில் 2,500 கனஅடி நீர்திறப்பு

மேட்டூர்: கே.ஆர்.எஸ்., அணையில், 2,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இந்த நீரின் ஒரு பகுதி வந்தடையும் என்பதால், மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கர்நாடகாவின், கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து காவிரியாற்றில் திறக்கும் நீர் அங்கிருந்து, 183 கி.மீ., தூரத்திலுள்ள மேட்டூர் அணைக்கு இரு நாளில் வந்தடையும். தற்போது கே.ஆர்.எஸ்., அணையின் நீர்மட்டம், 73 அடியாகவும், நீர் இருப்பு, 8 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. அணையின் நீர் இருப்பு குறைவாக உள்ள நிலையில், நேற்று முன்தினம் வினாடிக்கு, 2,500 கனஅடி நீர், கர்நாடகாவின் காவிரி கரையோரத்தில் குறுவை சாகுபடி ஆயத்த பணிக்காக திறக்கப்பட்டது. கே.ஆர்.எஸ்., அணையில் திறக்கப்பட்ட நீரின் ஒரு பகுதி மேட்டூர் அணைக்கு வந்து

சேரும். இதனால், மேட்டூர் அணை நீர்வரத்து இன்று சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 42.16 அடியாகவும், நீர் இருப்பு, 13.22 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 622 கனஅடி நீர், அணைக்கு வந்து கொண்டிருந்தது.

## விதை ஆய்வு துணை இயக்குனர் ஆய்வு

கொளத்தூர்: சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர், கொளத்தூர் ஒன்றிய வேளாண் விதை இருப்பு குடோன் மற்றும் கடைகளில் ஆய்வு மேற்கொண்டார். சேலம் விதை ஆய்வு இயக்குனர் சவுந்தரராஜன், நேற்று கொளத்தூர் வேளாண் அலுவலக குடோனில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இருப்பு வைத்துள்ள நிலக்கடலை, நெல் விதைகளை ஆய்வு செய்தார். மேலும், கொளத்தூரிலுள்ள உரக்கடைகளில், விதை விற்பனை நிலையங்களில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக வைத்துள்ள பருத்தி மற்றும் மக்காசோளம் விதைகள் தரமாக உள்ளதா என ஆய்வு செய்தார்.

## திண்டுக்கல்லில் நாவல் தேன்



திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை அடிவாரம் மெட்டூரில் 15 ஏக்கரில் ஜே.கே.பார்ம் என்ற பெயரில் நாவல் தோட்டம் உள்ளது. இங்கு 112 பெரிய நாட்டு நாவல் மரங்கள் உள்ளன. பிப்ரவரி மாதத்தில் பூப்பூக்கும். தற்போது நாவல் சீசன் துவங்கியுள்ளது. ஒரு மரத்தில் 65 கிலோ பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. நாவல் பழம் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தக்கூடியது. நன்மை செய்யும் கொழுப்பு சத்தும், நார்ச்சத்தும் நிறைந்தது. ஜீரண சக்தியை அதிகரிக்க கூடியது. ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை உடையது. விலை ஒரு கிலோ ரூ.170.

நாவல் மரங்களுக்கு நடுவே 20 தேன் கூடுகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் வளர்க்கப்படும் இத்தாலியன் தேனீக்கள், நாவல் மரத்தில் உள்ள பூக்களில் மட்டுமே தேன் எடுக்கும் வகையில் அங்கு வைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த பெட்டியில் சேருவதை நாவல் தேன் என கூறுகின்றனர். இந்த தேன் கட்டியாகவும், நாவல் சுவை கலந்த துவர்ப்பு தன்மையுடனும் இருக்கிறது.

**உரிமையாளர் சி. ஜெயக்குமார் கூறியதாவது**: நாவல் பழங்களை பசுமை அங்காடிகளில் விற்பனை செய்கிறோம். நாவல் ஜூஸ் 700 மில்லி ரூ.250. நாவல் பவுடர் 100 கிராம் ரூ.40, நாவல் தேன் கிலோ ரூ.650க்கு விற்கிறோம். ஒரு பெட்டியில் 4 கிலோ முதல் 6 கிலோ வரை தேன் எடுக்கிறோம். முதல் முறையாக நாவல் தேன் விற்கிறோம். நாவல் மரத்திற்கு இயற்கை உரங்கள் மட்டுமே இடுகிறோம், என்றார். இவரை 96980 06954ல் தொடர்பு கொள்ளலாம்.

**உலர் நாவல் பழம் உற்பத்தி:** இந்த பண்ணையில் நாவல் பழம் ஜனவரியில் இருந்து ஜூலை வரை காய்க்கும் வகையில் இரண்டு விதமாக பிரித்து சாகுபடி செய்யப்படுகிறது. சீசன் இல்லாத நேரங்களில் பழங்களை பதப்படுத்தி, உலர் பழம் தயாரிக்கப்படுகிறது. இதற்காக மரத்திலேயே நாவல் பழம் உலர விடப்படுகிறது. பின்பு 'சோலார் சுடுகலன்' மூலம் பதப்படுத்தப்பட்டு, 6 மாதம் கெடாத வகையில் தயாரிக்கப்படுகிறது. இது ஒரு கிலோ ரூ.1,500 வரை விற்கப்படுகிறது.

**-எஸ்.அரியநாயகம், திண்டுக்கல்**

## தென்னையில் சாதனை படைக்கும் மகாலிங்கம்



தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் தென்னை மரம் வளர்க்கப்படுகிறது. எனினும் 'உழுதவனுக்கு உழக்கு கூட மிஞ்சாது' என கூறுவர். இதை மெய்ப்பிக்கும் வகையில் தான் தென்னை விவசாயமும் உள்ளது. பருப்பு பிடித்த தேங்காய்களை மரத்தில் இருந்து வெட்டி எடுக்க மரம் ஒன்றுக்கு தனி கூலி. தேங்காய் மட்டை உரிக்க காய் ஒன்றுக்கு தனி கூலி. மட்டை உரித்த காய்களை தரம் பிரிக்க தனி கூலி. தேங்காய் கமிஷன் புரோக்கர் காய்களை தரம் பிரிக்கும்போது கழிவுக்காய் என ஆயிரம் காய்களில் 100 முதல் 150 காய்களை கழிப்பார். அதை கையோடு எடுத்து கொள்வார். கழிவு காய்களுக்கு புரோக்கர் நிர்ணயிக்கும் விலையே இறுதி. தவிர ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி தனி. தென்னையை வளர்த்து, ஆளாக்கி, உருவாக்கி, காய்களை பறித்து, மட்டை உரித்து, விற்பனை செய்து, காசாக்குவதற்குள் விவசாயி படும்பாடு சொல்லி மாளாது.

தென்னை விவசாயத்தில் தனக்கென தனி பாணியை உருவாக்கி லாபம் ஈட்டுகிறார், மதுரை மாவட்டம் சாத்தையாறு அணை பகுதியை சேர்ந்த தென்னை விவசாயி ஏ.மகாலிங்கம். இவர் மின் வாரியத்தின் தேர்வு நிலை உதவி செயற்பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். 70 வயது நிரம்பிய இவர், இளைஞர் போல் சுறுசுறுப்பாக விவசாய பணியில் ஈடுபட்டு வருகிறார். தென்னை விவசாயத்தில் புதுமையை புகுத்தியது குறித்தும், ஈட்டிய லாபத்தில் தென்னை தோட்டங்களை வாங்கி வருவது குறித்தும் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார்.

**அவர் கூறியதாவது:** சாத்தையாறு அணை அருகே 6 ஏக்கரில் தென்னை விவசாயம் செய்கிறேன். நெட்டை ரகத்தில் 600 மரங்கள் உள்ளன. காய்ப்பு மரம் 500 உள்ளன. 45 நாட்களுக்கு ஒரு முறை காய்கள் பருக்கும். தேங்காய் மண்டி புரோக்கர் நிர்ணயிக்கும் விலை சீசனுக்கு ஏற்ப 1000 காய்கள் ரூ.3500. இதில் 100 காய்கள் கழிவாக கணக்கிடுவார். அதற்கு மிக குறைந்த விலை நிர்ணயிப்பார். இதை தவிர்க்க தேங்காய் பறிப்பு, மட்டை உரிப்பு, தரம் பிரிப்பு என அனைத்து பணிகளையும் ஆட்களை வைத்து செய்கிறேன்.

காய்களை தரம் பிரித்து தேங்காய் மண்டிக்கு நேரடியாக அனுப்புகிறேன். இதனால் புரோக்கர் கமிஷன், கழிவு காய்கள் வீண் என்ற பேச்சுக்கே இடமில்லை. வீணாகும் தேங்காய் மட்டைகளை தேங்காய் நார் தயாரிக்கும் மில்லிற்கு விற்கிறேன். இதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. தண்ணீர் வசதி இருப்பதால் தென்னை விவசாயத்தை லாபகரமாக செய்கிறேன். கழிவுக்காய்கள் மூலம் கிடைக்கும் வருவாய் பெரிய அளவில் உள்ளது. லாபத்தில் தென்னை தோட்டங்களை வாங்கி வருகிறேன் என்றார்.

ஓய்வுக்கு பின்பும் முன்னோடி விவசாயி மகாலிங்கம் போல் ஓய்வறியாமல் உழைத்தால் 'உழுதவனுக்கு உலகமே சொந்தம்' என காலம் மலர்வது உறுதி. தொடர்புக்கு 94863 62785.

**- கா.சுப்பிரமணியன், மதுரை.**

**களர் உவர் மண்ணுக்கேற்ற மரங்கள்**



கார அயனியான சோடியம் மிகுந்து காணப்படும் நிலங்கள் களர் அல்லது கார நிலம் என்று அழைக்கப்படுகிறது. இம்மண்ணில் சோடியம் கார்பனேட் (சலவை உப்பு), சோடியம் பை கார்பனேட் (சோடா உப்பு) ஆகிய உப்புகள் அதிகமாக இருக்கும். களித்துகள்களில் சோடியம் அயனிகள் அதிகமாக இருப்பதால் சாதாரணமாக மண்ணின் பவுதீக பண்புகள் பாதிக்கப்படுகின்றன.

குறிப்பாக நுண்ணிய களித்துகள்கள் மண்ணில் இருந்து விடுபட்டு கீழ்நோக்கி சென்று மண் துளைகளை அடைத்து கொள்வதால் இம்மண்ணில் காற்றோட்டமும் நீர்புகும் தன்மையும் குறைந்து நீர் தேங்கியிருக்கும். நிலத்தின் மேற்பரப்பில் ஈரம் குறைந்து மண் இயக்க நிலை மிகுந்து காணப்படுவதால் பெரும்பாலான ஊட்டச்சத்துக்கள் குறைவாக காணப்படும். நிலம் முழுவதையும் பண்படுத்தாமல் குறிப்பிட்ட இடங்களை மட்டும் பண்படுத்தி மரச் சாகுபடி செய்வதன் மூலம் இந்த நிலங்களை விரைவில் பயனுள்ள நிலங்களாக மாற்ற முடியும்.

மூன்று மண் வகைகள்: உப்பு நிலை அதிகரிப்பதால் பாதிப்படைந்த மண்ணை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை உப்பு அதிகமுள்ள உவர் மண். சோடிய அயனிகள் அதிகமுள்ள களர் மண். இருநிலைகளையும் கொண்ட உவர் களர் மண் என மூன்று வகை உண்டு. களர், உவர் நிலங்களில் பெரும்பாலானவை களர் மற்றும் உவர் தன்மையுடன் பருவ காலத்தில் நீர் தேங்குதல் மற்றும் கோடையில் வறண்ட சூழ்நிலை ஆகிய வளர்ச்சிக்கு உதவாத சூழ்நிலைகளையும் ஒருங்கே கொண்டுள்ள நிலை பரவலாகக் காணப்படுகிறது. எனவே இப்பிரச்னைகள் அனைத்தையும் தாங்கி வளரக்கூடிய ஆற்றலை பொறுத்து, மர வகைகள் தேர்வு செய்வது அவசியமாகின்றது. களர், உவர் நிலங்களை பொருத்தவரை, அவை அதிக இடர்பாடுகளை கொண்டுள்ளதால் அவற்றின் தன்மைக்கு ஏற்ப மரம் நடுதல் அவசியம். **- பே. இந்திராகாந்தி, துணை இயக்குனர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை.**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாய பணியில் ரோபோ எக்ஸல் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்பு

குமாரபாளையம், : குமாரபாளையம் எக்ஸல் பொறியியல் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் புதிய ரோபோவை வடிவமைத்துள்ளனர். 10 கிலோ எடை கொண்ட இந்த ரோபோ, தோட்டங்களில் விதைகளை தேர்வு செய்தல், தேர்வு செய்த விதைகளை நடுதல், நீர் தெளித்தல், உரமிடல், களைக்கொல்லி தெளித்தல் போன்ற பணிகளை செய்கிறது. அல்ட்ராசானிக் தொழில் நுட்பத்தை கொண்ட இந்த ரோபோ, தனது இயக்கம், கருவிகளில் ஏற்படும் பழுதினை தானாகவே சரிசெய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சோலார் பேனல் அமைக்கப்பட்டுள்ளதால், சூரிய ஒளியில் இயங்கும். சூரிய ஒளி கிடைக்காத நேரத்தில், சேமித்து வைத்துள்ள மின் கலனிலிருந்து தேவையான மின் சக்தியை பெற்று இயங்கும். இதனால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாது. விவசாயம் உடல் உழைப்பு மிக்க கடுமையான தொழிலாக இருப்பதால், படித்த இளைஞர்கள் இதில் ஈடுபட தயங்குகின்றனர். இது போன்ற இயந்திரங்கள் இந்த துறையில் புகுத்தப்படுவதால், படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் விவசாயத்தில் ஆர்வம் காட்ட முடியும்.

உதவி பேராசிரியர் ராம்பிரகாஷ் மேற்பார்வையில் மாணவர்கள் எழிலரசன், ஜஸ்வின் பிரஜிஷ், கார்த்திக், சவுந்தர் ஆகியோர் இதை வடிவமைத்துள்ளனர். இதற்கான ஆலோசனைகளை துறைத்தலைவர் அருள்முருகன், ஒருங்கிணைப்பாளர்கள் குணசேகரன், பவளம் ஆகியோர் வழங்கினர். மாணவர்களின் புதிய கண்டுபிடிப்பை, கல்லூரியின் தலைவர் டாக்டர் நடேசன், துணைத்தலைவர் மதன்கார்த்திக், முதல்வர் பழனிசாமி மற்றும் பேராசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

## கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை மறுநாள் நடக்கிறது

தர்மபுரி : தர்மபுரியில் வரும் 24ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. இது குறித்து தர்மபுரி மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 24ம் தேதி காலை 11 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கூட்டத்திற்கு கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகிக்கிறார். இந்த கூட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகளை தெரிவித்து பயன் அடையலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் போக நெல் நாற்று நடும் பணி தீவிரம்

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி அணை தண்ணீரை நம்பி பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், காவேரிப்பட்டணம், ஜனபர்அள்ளி, பையூர் உள்ளிட்ட 16 ஊராட்சிகளிலும் 9012 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் அணையின் ஷட்டர் பராமரிப்பு பணிக்காக, அணையில் இருந்து, 29 அடியாக தண்ணீரை குறைக்க ஆற்றில் திறந்துவிடப்பட்டது. இதனால் அணையில் தண்ணீர் இருப்பு குறைந்துள்ளது.

இந்நிலையில் ஏரி பாசனத்தை நம்பி கிருஷ்ணகிரி சுற்று வட்டார பகுதிகளான தேவசமுத்திரம், புதூர், காமராஜ் நகர், தளாப்பள்ளி, தின்னகழனி, மலைச்சந்து உள்ளிட்ட பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் வயல்களில் நெல் நடவு செய்ய, நாற்று விட்டிருந்தனர். தற்போது நாற்று வளர்ந்து நடவும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அணை பாசன விவசாயிகள் நெல் நடவு செய்வதில் ஆர்வம் காட்டாத நிலையில், சுற்றுவட்டார பகுதிகளில் மட்டுமே நெல் நடவு செய்ய விவசாயிகள் தயாராக உள்ளதால், இவ்வருடம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல்போக நெல் சாகுபடி பெருமளவில் குறைய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மஞ்சள் பயிரிட ஜோதிடரிடம் பொருத்தம் பார்க்கும் விவசாயிகள்

போச்சம்பள்ளி : மத்தூர் சுற்றுவட்டார பகுதியிலுள்ள விவசாயிகள், மஞ்சள் பயிரிட ஜோதிடரிடம் சென்று பெயர் பொருத்தம் பார்த்த பின்னரே, மஞ்சள் பயிரிடும் அதிசயம் நடக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது பரவலமாக மழை பெய்து வருகிறது. மத்தூரில் கடந்த வாரம் பெய்த மழையால் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதையடுத்து மத்தூர் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள், மஞ்சள் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால் விவசாயிகள், மஞ்சள் பயிரிடும் முன்பு கண்டிப்பாக ஜாதகம் பார்க்க வேண்டும் என கூறி, உள்ளூர் ஜோதிடர்களை சந்தித்த வண்ணம் உள்ளனர்.

இதுகுறித்து மஞ்சள் விவசாயிகள் கூறியது: மஞ்சள் பயிர் 10 மாதங்களில் விளைந்த பின், அறுவடை செய்து, வேக வைத்து உலர்த்திய பின் விற்பனைக்கு அனுப்புவது வழக்கம். மஞ்சள் பலனைத்தர சுமார் 1 வருடம் ஆவதால், மஞ்சள் பயிரிடும் முன்பு, விவசாயிகள் தங்களின் பெயருக்கும், மஞ்சளுக்கும் ஒத்துப் போகிறதா என ஜோதிடர்களிடம், தங்களின் ஜாதகத்தினை கொடுத்து கேட்கின்றனர். இதில், ஒருவேளை மஞ்சளுக்கும், விவசாயிக்கும் பொருத்தமில்லை என ேஜாதிடர் கூறினால், தனது மனைவி, மகன் பெயருக்கு பலன் பார்க்கின்றனர்.

குடும்பத்தில் உள்ளவர்களின் ஒருவருக்கு மஞ்சளுடன் பெயர் பொருத்தம் ஒத்துப்போனால், அவர்களை கொண்டு முதல் நாற்றை நடச்செய்து மஞ்சள் பயிரிடுகின்றனர். யாருக்கும் ராசி இல்லை எனில், மஞ்சள் பயிரிடும் முடிவை மாற்றி விடுகின்றனர். இது ஆதிகாலம் முதல், இன்று வரை மஞ்சள் பயிரிடும் முன் விவசாயிகளின் நடைமுறையில் உள்ள வழக்கமாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### வேளாண் குறைதீர்க்கும் கூட்டம்

ஈரோடு, : ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான வேளாண் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 24ம் தேதி காலை 11 மணிக்கு ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏலம் துவங்கிய முதல் நாளில் ரூ.35 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

அந்தியூர், ; அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கட்கிழமை தோறும் விவசாய விளைபொருட்களின் ஏலம் நடைபெறுவது வழக்கம். நேற்றைய ஏல விற்பனைக்கு 33 ஆயிரம் தேங்காய்கள் வந்ததில் சிறிய தேங்காய் ஒன்று ரூ.2.70க்கும், பெரிய தேங்காய் ரூ.7.70க்கும் மொத்தம் ரூ.1 லட்சத்து 45 ஆயிரத்திற்க்கு விற்பனையானது. 12 மூட்டைகள் கொப்பரைத் தேங்காய் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.4 ஆயிரத்து

319க்கும் அதிகபட்சம் ரூ.5 ஆயிரத்து 369க்கும் மொத்தம் ரூ.2.50 லட்சத்துக்கு ஏலம் போனது.

வெள்ளை எள் 80 மூட்டைகள் குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 229 முதல் ரூ.7 ஆயிரத்து 329 வரை ரூ.3 லட்சத்துக்கும் 40 மூட்டைகள் மக்காச்சோளம் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.1728க்கும், அதிகப்பட்சம் ரூ.1,892க்கும் மொத்தம் ரூ.70 ஆயிரத்துக்கும் விற்பனையானது. நிலக்கடலை 260 மூட்டைகள் வந்ததில் காயந்த நிலக்கடலை குறைந்தபட்சம் ரூ.4 ஆயிரத்து 3399-க்கும், அதிகபட்சமாக ரூ.6 ஆயிரத்து 200-க்கும், ஏலம் போனது. மொத்தம் ரூ.3.50 லட்சத்துக்கும் விற்பனையானது.

ஆமணக்கு 15 மூட்டைகள் கிலோ ரூ.33.09 முதல் ரூ.33.40 வரை விலையில் ரூ.30 ஆயிரத்திற்க்கும் ஏலம் போனது. பருத்தி ஏல முதல் துவக்க நாளான நேற்று 2000 மூட்டைகள் பிடி காட்டன் ரகம் வந்தது. இது குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 869 முதல் 5 ஆயிரத்து 406 வரை ரூ.35 லட்சத்திற்கு ஏலம் போனது. மொத்த வேளாண் விளைபொருட்கள் ரூ.47 லட்சத்து 45 ஆயிரத்திற்கு விற்பனையானது.

## மானிய விலையில் காய்கறி விதைகள் விவசாயிகள் கூட்டத்தில் தகவல்

ஊட்டி, : ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமை வகித்தார். தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் முன்னிலை வகித்தர். கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களில், 50 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. தொடர்ந்து நடந்த கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் பால் உரிய முறையில் சோதனை செய்யப்படுகிறதா என விவசாயிகள் கேட்டனர். அதற்கு பதில் அளித்த அதிகாரிகள், நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் பால், முதலில் பரிசோதனை கூடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னரே தரம் பிரிக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது, என்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இந்திய ஜெர்மானிய முகவை சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் கேரட், பீட்ரூட், முட்டைகோஸ் மற்றும் பீன்ஸ் விதைகள் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். 2015-16ம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்பண்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் தனியார் பட்டா நிலங்களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பொருட்டு 5 ஆயிரம் சில்வர் ஓக் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மரக்கன்றுகள் பயனாளிகளால் நன்கு பராமரிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு பின் உயிர்ப்பு செடிகளின் அடிப்படையில் அதற்கான ஊக்கத் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணி தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் இறுதிக்குள் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என கூட்டுறவு அதிகாரிகள் தெரிவித்தனர். தாம்பட்டியிலிருந்து காட்டேரி டேம் வரையில் உள்ள ஓடைகளை தூர்வாரும் பணி மேற்கொள்ள எம்பி., நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் பணிகள் முடிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

# தஞ்சையில் இருந்து நெல்லைக்கு 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் 1,250 டன் புழுங்கல்அரிசி நெல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும்.

இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,250 டன் புழுங்கல்அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி, புனல்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,250 டன் புழுங்கல் அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து அரிசி மூட்டைகளுடன் சரக்குரெயில் தஞ்சையில் இருந்து நெல்லைக்கு புறப்பட்டு சென்றது.

## நெல்லை மாவட்டத்தில் இறால் மீன் சீசன் தொடங்கியது ஒரு கிலோ ரூ.450-க்கு விற்பனை

நெல்லை மாவட்டத்தில் இறால் மீன் சீசன் தொடங்கியது. ஒரு கிலோ ரூ.450-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இறால் மீன் சீசன்

நெல்லை மாவட்டத்தில் உவரி, கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, தோமையர்புரம், கூத்தன்குழி, கூட்டப்பனை, கூடுதாழை, மேற்கு பெரியதாழை, பஞ்சல் ஆகிய மீனவ கிராமங்கள் உள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நாட்டு படகு மூலம் மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள்.

தென் மேற்கு பருவகாற்று வீசும் ஜூன், ஜூலை மாதங்களில் இங்கு இறால் மீன் சீசன் நடைபெறும். கடந்த சில நாட்களாக வீசிய தென்மேற்கு பருவகாற்றை தொடர்ந்து தற்போது இறால் மீன் சீசன் தொடங்கி உள்ளது. இங்கு பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு இறால் மீன்களை வாங்கி செல்கிறார்கள். இறால் மீன் சீசன் தொடங்கி உள்ள நிலையில் தற்போது குறைந்த அளவே இறால் மீன்கள் கிடைக்கின்றன.

ரூ.450-க்கு விற்பனை

சிறிய ரக இறால் மீன் ஒரு கிலோ ரூ.450-க்கும், பெரிய ரக இறால் மீன் ரூ.700-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வரும் நாட்களில் இறால் மீன்கள் அதிக அளவில் கிடைக்கும் என்று மீனவர்கள் எதிர்பார்த்து காத்து இருக்கிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இறால் மீன் கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது தூத்துக்குடி, நாகப்பட்டினம், கடலூர், ராமநாதபுரம் ஆகிய கடற்கரையில் செயற்கை இறால் மீன் பண்ணை அமைக்கப்பட்டு மீன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால்

முன்பு போல் இறால் மீன்கள் விலை போகவில்லை என மீனவர்கள் தெரிவித்து உள்ளனர்.